# வெற்றிடங்கள்

## இலங்கை கட்டளைகள் நிறுவனம் (SLSI)

## விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சு

### உதவி பணிப்பாளர் பதவி - நடுத்தர முகாமைத்துவ பிரிவு (MM 1-1)

# உதவி பணிப்பாளர் பதவி (தொழில்நுட்பம்)

## தகைமைகள்

**வெளிவாரி**

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட சிறப்பு பட்டம் (4 ஆண்டுகள்) அல்லது வகுப்பு ஒன்றுடன் பொது பட்டம் (3 ஆண்டுகள்) ஒன்றாக பௌதிகவியல் உட்பட விஞ்ஞானப் பிரிவில் பட்டம் ஒன்று.

***அத்துடன்***

பதவிக்கு தொடர்புபட்டு ஓர் ஆண்டு தகைமைக்கு பின்னரான அனுபவம்.

**உள்ளக (கீழுள்ள 01 அல்லது 02)**

01) மேலுள்ள வெளிவாரி அபேட்சகர்களுக்கு தேவையான தகைமையை பெற்றிருத்தல்.

02) பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பில் கனிஷ்ட முகாமைத்துவ பிரிவில் (JM) குறைந்தது 5 ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**தேர்வு முறை**

**எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும் நேர்முகப்பரீட்சை**

இந்த பரீட்சையானது கீழ் தரப்பட்டுள்ள விடயங்களை உள்ளடக்கியதாக இரு பாகங்களைக் கொண்ட ஒரு வினாத்தாளை (3 மணி நேரம்) உடையதாகும்.

- ஆங்கில மொழி தேர்ச்சி
- உளச்சார்புச் சோதனை

***மற்றது***

அனைத்து விண்ணப்பதாரர்களும்

- இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
- நாட்டின் எந்த ஒரு பகுதியிலும் பணியாற்றுவதற்கும் பதவிக்கும் உரிய பணிகளை மேற்கொள்வதற்கும் உடல் மற்றும் உளத் தகைமையை பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.
- சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

## சம்பள அளவு :

இ.ரூபா 91,690.00 – 10 x 2,480.00 - இ.ரூபா 116,490.00 (2025 இல் 2025.03.25 ஆம் திகதிய 01/2025 பொதுச் சேவைகள் சுற்றுநிருபத்தின்படி 03 தவணைகளில் இது நிறுவப்படும். 2026 இல் 71,730.00 இ.ரூபா, 2027 இல் 81,710.00 இ.ரூபா, 2027 இல் 91,690 இ.ரூபா)

## வயது :

22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

விண்ணப்பதாரர்கள் கீழ் தரப்பட்டுள்ள இணைப்பு அல்லது QR Code ஊடாக கிடைக்கும் விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்ய வேண்டும். பூர்த்தி செய்தவுடன், படிவத்தை பதிவிறக்கம் செய்து, விண்ணப்பதாரரால் முறையாக கையொப்பமிடப்பட்டு, 2025.09.15 அன்று அல்லது அதற்கு முன்னர் அதே இணைப்பு அல்லது QR Code வழியாக மென்பிரதியை சமர்ப்பித்தல் வேண்டும்.

## ஏனைய நன்மைகள்

1. பயன்படுத்தப்படாத மருத்துவ விடுப்பை பணமாக்கல்
2. ஆயுள் காப்புறுதித் திட்டம் மற்றும் மருத்துவ காப்புறுதித் திட்டம்
3. ஒரு வரம்புக்கு உட்பட்டதாக மருத்துவ செலவுகளை மீளளித்தல்
4. பொது திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்டவாறு வருடாந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவு
5. தொழில்முறை சூழல் ஒன்றில் பணியாற்றும் சந்தர்ப்பம்
6. தொடர்பாடல் கொடுப்பனவு

Link for Post of Assistant Director (Technical)
Sri Lanka Standards Institution (SLSI)
https://slsi.lk/web/en/careers/

அரச துறை நிறுவனங்களின் ஊழியர்கள் நிறுவனங்களின் குறித்த தலைவர்கள் மூலம் தமது விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும்.


**பணிப்பாளர் நாயகம்**

**இலங்கை கட்டளைகள் நிறுவனம்**

**இல. 17, விக்டோரியா பிளேஸ்,**

**எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 08.**

**தொலைபேசி: 011-2671567-72**